Derek Prince
MINISTRIES INDIA

Free Copy

நேசிக்க கட்டளை பெற்றவர்கள்

இவ்வளவு துன்பங்களும் பிரிவினைகளும் இருக்கும் உலகில், 'ஒருவருக்கொருவர் அன்புகூர வேண்டும்' என்ற இயேசுவின் கட்டளையை நாம் எவ்வாறு பின்பற்றுவது? – இந்த வல்லமை வாய்ந்த வேதாகம சிந்தையை தூண்டும் கடிதத்தில், டெரிக் பிரின்ஸ் இதை எப்படி செய்வது என்று இயேசுவின் முன்மாதிரியையும், அவர் எப்படி நேசித்தார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

யோவான் 13:34-35 இல் கூறுகிறது:

> "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்."

அன்பு ஒரு தேர்வு அல்ல. ஒரு கட்டளை. ஒரு புதிய கட்டளை என்று இயேசு கூறினார்.

யூத மக்கள் மோசேயின் பத்துக் கட்டளைகளுக்குப் பழகியவர்கள். ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் இதை பதினோராவது கட்டளை என்று அழைக்கலாம், மேலும் இது பத்து கட்டளைகளையும் உள்ளடக்குகிறது என்று நான் நம்புகிறேன்.

நாம் எப்படி ஒருவரையொருவர் நேசிப்பது?

இயேசு நம்மை நேசித்ததைப் போலவே. அது தன்னலமற்றது, சுயத்தை கொடுக்கும், மற்றவர்களின் நன்மையை முதலில் தேடும். அத்தகைய அன்பை நீங்கள் பெற்றால், உலகம் முழுவதும் எழுந்து உட்கார்ந்து கவனிக்கும், ஏனென்றால் அவர்கள் அதை எங்கும் காண்பதில்லை என்று இயேசு கூறினார். அவர்கள் பார்ப்பது சுயநலம், சுயதேடுதல், பறித்தல். தேவனின் அன்பை வெளிப்படுத்துவதன் மூலம் நீங்கள் எந்த சூழ்நிலையிலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தலாம்.

பெரும்பாலான மக்களிடம் இன்று கிறிஸ்தவர்களின் சபையைப் பற்றிய அவர்களின் அபிப்ராயம் என்ன என்று நீங்கள் கேட்டால், அவர்கள் அன்பின் அடிப்படையில் பேச மாட்டார்கள். உலகம் நம்மைப் பார்க்கும் விதம் அதுவல்ல. அற்புதமான மற்றும் மகிமையான விதிவிலக்குகள் உள்ளன, ஆனால் அடிப்படையில் அவர்கள் நம்மை மதவாதிகளாக பார்க்கிறார்கள். சட்டங்களின் தொகுப்பைப் பின்பற்றுபவர்கள்.

எனவே நமக்கு இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன. இயேசு நம்மில் அன்பு கூறுவது போல நாமும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கீழ்ப்படிதலுடன் இருக்கலாம், அல்லது நாம் ஒருவரிலொருவர் அன்புகூராமல், கீழ்ப்படியாமல் இருக்கலாம். இயேசு ஒருபோதும் வீண் வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. 'நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லா மனுஷரும் அறிந்துகொள்வார்கள்' என்றார். நம்மால் இது முடியும்.

நான் எந்த வகையிலும் வரலாற்று ஆசிரியர் அல்ல, ஆனால் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிக வல்லமை வாய்ந்த ரோம பேரரசில், அவிசுவாசிகள் கிறிஸ்தவர்களைப் பற்றி, 'இந்த கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் எப்படி அன்பு கூறுகிறார்கள் பாருங்கள்' என்று கூறினார்கள். அது அவர்களின் அபிப்ராயமாக இருந்தது. அது வெற்றி பெற்றது.

மூன்று நூற்றாண்டுகளுக்குள், அந்த நேரத்தில் பூமியில் இருந்த மிக சக்திவாய்ந்த பேரரசு ஒரு ரோம சிலுவையில் மரித்த, யூத தச்சரான இயேசுவின் கூற்றுகளுக்கு உடன்பட்டது. அவர்களால் அதை விளக்க முடியவில்லை. அவர்களால் அதை புரிந்துகொள்ள முடியவில்லை. பல்வேறு பின்னணிகள், பல்வேறு இனங்கள் மற்றும் சமூக நிலைகளைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் நேசித்தார்கள். முழு ரோம உலகத்தையும் பாதிக்கும் ஒரு புதிய வாழ்க்கை முறைக்கு அவர்கள் வழி வகுத்தார்கள்.

இந்த வகையான அன்பு, உண்மையில் ஒரு உணர்ச்சி அல்ல. இது ஒரு தீர்மானம். சங்கீதம் 18ன் முதல் வசனத்திற்கு உங்களைத் திருப்ப விரும்புகிறேன். தாவீதின் வார்த்தைகள் இவை:

> "என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன்."

தாவீது ஒரு முடிவை எடுத்தார். நீங்கள் எப்போதாவது அந்த முடிவை எடுத்திருக்கிறீர்களா? என்னில் உள்ள அனைத்தையும் கொண்டு நான் கர்த்தரில் அன்புகூருவேன் என்று நீங்கள் எப்போதாவது உண்மையில் முடிவு செய்திருக்கிறீர்களா?

தாவீது அதை தனிப்பட்ட முடிவாக எடுத்தார். ஆனால் 1 யோவான் 4ம் அதிகாரத்தில் நாம் ஒரு கூட்டு முடிவை எதிர்கொள்கிறோம், அது நம்மை மேலும் முன்னேறி அழைத்துச் செல்கிறது:

> "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்"
>
> (1 யோவான் 4:7)

இது ஒரு கூட்டு முடிவு என்று நீங்கள் பார்க்கிறீர்கள். ஒருவரிலொருவர் அன்பு கூறுவோம். இறுதி சோதனை ஒரு கோட்பாட்டிற்கு சம்மதம் தெரிவிப்பது இல்லை, அது அன்பு.

அன்பு கூறுகிற ஒவ்வொருவரும் தேவனால் பிறந்தவர்கள். நீங்கள் தேவனால் பிறக்காத வரை அத்தகைய அன்பைப் பெற முடியாது. ஆனால் நீங்கள் தேவனால் பிறந்தவர்கள் என்றால் அதற்கான ஆதாரம் அந்த வகையான அன்பாக இருக்க வேண்டும்.

அதற்கு சிறந்த உதாரணம் இயேசு. அவர்கள் அவருக்கு எல்லா தீங்கையும் செய்தார்கள். அவரை அடித்தார்கள், அவருடைய கைகளையும் கால்களையும் குத்தினார்கள், தலையில் முள்கிரீடம் வைத்தார்கள், காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள், அவரைத் திட்டினார்கள், தூற்றினார்கள், ஆனால் அவர்களால் செய்ய முடியாத ஒரே காரியம் என்ன?

அவர் நேசிப்பதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அவர் அவர்களை இறுதிவரை நேசித்தார். அப்படிப்பட்ட அன்புடன் நீங்கள் நேசித்தால் உங்களை யாராலும் தடுக்க முடியாது. நீங்கள் மட்டும் பூமியில் சுதந்திரமான நபராக இருப்பீர்கள், ஏனென்றால் நீங்கள் செய்ய விரும்புவதை யாராலும் தடுக்க முடியாது.

அதற்காகவே தேவன் காத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன்—அவருடைய தெய்வீக அன்பினால் நாம் ஒருவரிலொருவர் அன்பு கூற வேண்டுமென்று.

விசுவாசம் மற்றும் நீதியைப் பற்றி நாம் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் உண்மையில் நம்முடைய உதவி தேவைப்படும் நபர்களுக்காக நாம் எதுவும் செய்யாவிட்டால், நாம் வெற்று வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். நம்முடைய உதவியை தேவைப்படுகிறவர்களுக்கு பஞ்சமில்லை.

பிலிப்பியர் 3 ஆம் அதிகாரத்தில் பவுலின் ஜெபத்தைக் கண்டு நான் எப்போதும் வியப்படைந்திருக்கிறேன்:

> "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்,"

சில விஷயங்கள் வேதனையால் மட்டுமே வரும் என்பதை பார்க்க வந்தேன்.

வேதனை வேறு எதுவும் செய்யாத ஒன்றைச் செய்கிறது. நான் பிரிட்டிஷ் இராணுவத்தில் இருந்தபோது, மருத்துவ உதவியாளராக இருந்தேன். பிரிட்டிஷ் வீரர்களுடனான எனது தொடர்பு மூலம், அவர்கள் உண்மையாக கடினமான, ஆபத்தான நேரத்தை ஒன்றாகக் கடந்து சென்றவர்கள், அவர்கள் தீக்குள்ளானார்கள், அகழிகளில் ஒன்றாக இருந்திருக்கிறார்கள், அவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் அறிந்தேன். மற்றவர்கள் இணைக்கப்படாத ஒரு விதத்தில் இவர்கள் இணைந்திருக்கிறார்கள்.

அவர்களின் ஆளுமை, அவர்களின் சமூக நிலை, பல விஷயங்களில் மிகவும் வித்தியாசமாக இருக்கலாம், ஆனால் ஒன்றிணைந்து கஷ்டத்தை கடந்து வந்ததால் அது அவர்களை இணைக்கிறது. இயேசு நம்முடன்

இணைக்கப்பட விரும்புகிறார் என்று நான் நினைக்கிறேன், நாம் அவருடன் சேர்ந்து அதைக் கடந்து செல்லும்போது அவருடன் உடைக்க முடியாத ஒரு பந்தம் ஏற்படுகிறது. நான் துன்பத்தை வரவேற்கவில்லை, ஆனால் அதற்கு நான் தயாராக இருக்கிறேன். துன்பம் இல்லாமல் தேவன் என்னில் செய்ய முடியாத சில விஷயங்கள் உள்ளன என்று நான் உணர்கிறேன்.

நீங்கள் எப்படி? நீங்கள் அர்ப்பணிக்க விரும்புகிறீர்களா? இது ஒரு வேதப்பூர்வ அர்ப்பணிப்பு. “அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் நான் அறியும்படிக்கு” என்று பவுலின் வார்த்தைகளில் சொல்வீர்களா? நீங்கள் இதுவரை இருந்ததைவிட தேவனிடம் நெருங்கி வருவீர்கள். அதைத்தான் தேவன் விரும்புகிறார். பின்வரும் அறிக்கையை அமைதியாக வெளியிடும் பாக்கியத்தை உங்களுக்கு வழங்க விரும்புகிறேன்.

> கர்த்தராகிய இயேசுவே, நீர் எனக்காக சிலுவையில் மரித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் என்னை உம்முடைய நித்திய அன்புடன் நேசித்தீர் என்பதற்காக நன்றி. என்னை உம்முடைய கிருபையுடன் உம்மிடம் இழுத்துக்கொண்டீர் நன்றி.
>
> இப்போதும், ஆண்டவரே, நான் உம்மையும், உமது உயிர்த்தெழுதலின் வல்லமையையும், உமது பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறேன். என் வாழ்நாளில் இதுவரை நான் அறிந்திராத ஒரு நெருக்கமான பிணைப்பில் நான் உம்மிடம் சேர்க்கப்பட விரும்புகிறேன். ஆண்டவரே, தடையில்லாமல் நான் என்னை உமக்குக் கொடுக்கிறேன்.
>
> நான் இருக்கிற வண்ணமாக என்னை எடுத்து, உமது மகிமைக்காக நான் என்னவாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீரோ அதை என்னில் உருவாக்கும், ஆண்டவரே. இயேசுவின் நாமத்தில். ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
MINISTRIES INDIA

Contact us

www.derekprince.com/en-in
admin@derekprince.in
Ph : 9585538201
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM SALAI,
Trichy - 620017

Visit
OUR WEBSITE

ENGLISH | TAMIL

HINDI | TELUGU

KANNADA | MALAYALAM

SCAN THE ABOVE QR CODES TO ACCESS OUR WEBSITE IN YOUR PREFERRED LANGUAGE